# மணிப்பூர் கலவரம்: மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**மதுரை, ஜூலை 16:** மணிப்பூர் மாநிலத்தில் தொடரும் கலவரத்தைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக மக்கள் ஒற்றுமே மேடை அமைப்பு வலியுறுத்தியது.

மணிப்பூரில் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீது நடத்தப்படும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி, தமிழக மக்கள் ஒற்றுமை மேடை அமைப்பின் சார்பில், கண்டன பொதுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மதுரை பழங்காநத்தம் பகுதியில் நடைபெற்ற இந்த பொதுக் கூட்டத்துக்கு அமைப்பின் மாநகர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ந.ஜெயச்சந்திரன் தலைமை வகித்தார்.

அனைந்திய ஜனநாயக மாதர் சங்க மாநிலச் செயலர் எஸ்.கே. பொன்னுத்தாய், சோக்கோ அறக்கட்டளை நிர்வாகி எஸ்.செல்வ கோமதி, சிஐடியு மாவட்டச் செயலர் இரா.லெனின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில ஒருங்கிணைப்பாளர் அருணன், மதுரை உயர்மறை மாவட்ட பேராயர் அந்தோணி பாப்புசாமி, மனிதநேய மக்கள் கட்சி பொதுச் செயலர் ச.அப்துல் சமது, மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றி திபேன், மதுரை தெற்கு சட்டப்பேரவை உறுப்பினர் மு.பூமிநாதன், சிஎஸ்ஐ பேராயர் டி.ஜெய்சிங் பிரின்ஸ் பிரபகர், அமலவை அதிபர் அருட் சகோதரி அந்தோணி புஷ்பரஞ்சிதம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

பொதுக்கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப்பேரவைக் குழு முன்னாள் தலைவர் கே.பாலபாரதி பேசியதாவது:

மணிப்பூரில் கடந்த 3 மாதங்களாக கலவரம் நீடித்து வருகிறது. இந்தக் கலவரத்தைத் தடுக்க வேண்டிய பிரதமர் நரேந்திர மோடி உலக நாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்று கொண்டிருக்கிறார். மணிப்பூர் மாநிலத்தை ஆட்சி செய்யும் பாஜக முதல்வர் அந்த மாநிலத்தில் உள்ள சிறுபான்மையினரை வெளியேறுமாறு கூறி வருகிறார். இதனால்தான் சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடர்ந்து வருகிறது. மணிப்பூர் மக்களுக்காக தமிழக மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என்றார் அவர்.

நிர்வாகி ஆர்.விஜயராஜன் வரவேற்றார். முன்னதாக, மதுரை புறவழிச் சாலையில் இருந்து பொதுக் கூட்டம் நடைபெறும் பகுதி வரை கண்டனப் பேரணி நடைபெற்றது.